[2018 ஜூன் 13

189—

தொழிற்பயிற்சி நிலையம்

***4917—திரு. அ. மனோகரன்:**

மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வாசுதேவநல்லூர் தொகுதி, சிவகிரியில் தொழிற்பயிற்சி நிலையம் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) நிலோபர் கபில், தொழிலாளர் நலத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) வாசுதேவநல்லூர் தொகுதி அமைந்துள்ள திருநெல்வேலி மாவட்டத்தில் தற்போது 6 அரசு தொழிற்பயிற்சி நிலையங்கள் 2,183 இருக்கைகளுடன் இயங்கி வருகின்றன. இவற்றில் 426 இடங்கள் நிரப்பப்படாமல் காலியாக உள்ளன.

முற்பகல் 11–10

மேலும், தனியார் தொழிற்பயிற்சி நிலையங்களில் 50 சதவிகித இடங்களை அரசு ஒதுக்கீட்டின்கீழ் மாவட்டக் கலந்தாய்வுமூலம் நிரப்பி, பயிற்சிக் கட்டணத்தை அரசே ஏற்கும் திட்டத்தின்கீழ், சிவகிரி தாலுகாவில் உள்ள வாசுதேவநல்லூரில் இயங்கிவரும் ஒரு தனியார் தொழிற்பயிற்சி நிலையத்திலும் 20 இடங்கள் காலியாக உள்ளன. இந்தக் காலியிடங்கள் இப்பகுதியிலுள்ள மாணவ, மாணவிகளின் தேவையைப் பூர்த்தி செய்யும் வகையில் உள்ளன. எனவே, புதியதாக மேலும் ஒரு அரசு தொழிற்பயிற்சி நிலையம் வாசுதேவநல்லூர் தொகுதிக்கு உட்பட்ட சிவகிரியில் அமைக்க வேண்டிய தேவை எழவில்லை என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. மனோகரன் அவர்கள்.*

திரு. அ. மனோகரன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் வணங்கும் இதய தெய்வம் புரட்சித் தலைவி*

2018 ஜூன் 13]

அம்மா அவர்களை வணங்கி, தமிழகத்தினுடைய மாண்புமிகு முதல்வர் அவர்களையும் மற்றும் மாண்புமிகு துணை முதல்வர் அவர்களையும் வணங்கி, தங்களுக்கும் எனது பணிவான வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கூறிய கருத்துகளை நான் ஏற்றுக்கொண்டாலும், மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கூறியதைப்போல அங்கிருக்கின்ற தொழிற்பயிற்சி நிலையங்களில் அங்கே ஒதுக்கிக்கொடுக்கப்பட்ட இடங்கள் பூர்த்தியாகவில்லை என்கின்ற பதிலை அளித்திருக்கின்றார்கள். எனது தொகுதியான வாசுதேவநல்லூர் சட்டமன்றத் தொகுதியிலே தனியார் நடத்துகின்ற கல்லூரிகள் அதிகமாக இருந்தாலுங்கூட, 3 பேரூராட்சிகளையும் ஒரு நகராட்சியையும் 2 ஊராட்சி ஒன்றியங்களையும் உள்ளடக்கிய ஒரு மிகப் பெரிய தொகுதி என்னுடைய தொகுதி. அந்தப் பகுதியிலே அதிகமான மாணவர்கள் படித்து வருகின்றார்கள். அங்கே பள்ளிக் கல்விக்கும், உயர் கல்விக்குமாக நிறைய பள்ளிகள் அருமையாகச் செயல்பட்டுக்கொண்டிருக்கின்றன. தனியார் நடத்துகின்ற தொழிற்பயிற்சி நிலையங்களுக்கும் அரசு நடத்துகின்ற தொழிற்பயிற்சி நிலையங்களுக்கும் கட்டண வேறுபாடுகள் இருக்கின்றன என்று சொல்கிறார்கள். அங்கே இருக்கக்கூடிய மாணவர்களெல்லாம் அரசு தொழிற்பயிற்சி நிலையங்களிலே படிக்க வேண்டுமென்று சொன்னால், அருகிலே தென்காசி சட்டமன்றத் தொகுதியிலே இருக்கக்கூடிய தென்காசியிலும், வி.கே. புரத்திலும் செயல்பட்டுக்கொண்டிருக்கின்ற தொழிற்பயிற்சி நிலையங்களுக்குத்தான் சென்று படிக்க வேண்டிய சூழ்நிலை இருக்கின்றது. அந்த மாணவர்களுடைய, குறிப்பாக அந்த ஏழையெளிய மாணவர்களுடைய நலனைக் கருதி எனது தொகுதியிலே ஓர் அரசு தொழிற்பயிற்சி நிலையம் அமைத்துக் கொடுக்க மாண்புமிகு அமைச்சர் அவர்களை அன்போடு வேண்டி கேட்டுக்கொள்கின்றேன். நன்றி, வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு டாக்டர் (திருமதி) நிலோபர் கபில்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மற்ற மாவட்டங்களிலுள்ள தொழிற்பயிற்சி நிலையங்களின் எண்ணிக்கையைவிட*

திருநெல்வேலி மாவட்டத்தில்தான் அதிகமாக 6 அரசு தொழிற்பயிற்சி நிலையங்களும், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறியபடி 27 தனியார் தொழிற்பயிற்சி நிலையங்களும் செயல்பட்டுக்கொண்டிருக்கின்றன. ஏழையெளிய மாணவர்களின் நலனைக் கருத்திற்கொண்டு, இதற்கு மேலும் அவசியம் ஏற்படின், புதிய தொழிற்பயிற்சி நிலையங்கள் தொடங்கும் முன்னர் அப்பகுதியிலுள்ள மாணவ, மாணவிகளிடையே உள்ள வரவேற்பு, அப்பகுதியிலுள்ள தொழில் நிறுவனங்களில் ஏற்படும் வேலைவாய்ப்புகள் ஆகியவற்றை கள ஆய்வு செய்து, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் கனிவான பார்வைக்குக் கொண்டு சென்று உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. மனோகரன் அவர்கள்.*

திரு. அ. மனோகரன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதல்வர் அவர்களுடைய மேலான பார்வைக்கு எடுத்துச் சென்று அதற்கு உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்று கூறிய மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்குத் தங்கள் மூலமாக எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 190, மாண்புமிகு உறுப்பினர் திரு. இரா. குமரகுரு, மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.*

190—

மாணவர் விடுதி

*10620—திரு. இரா. குமரகுரு:

மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

உளுந்தூர்பேட்டை தொகுதி, சரவணம்பாக்கம் அரசினர் மேல்நிலைப் பள்ளிக்கு பிற்படுத்தப்பட்டோர் நல மாணவர் விடுதி அமைக்க அரசு ஆவன செய்யுமா?